# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 275/பேரூ/2023
நாள். 19.12.2023

திரு. த. பழனிராஜ்,
மெலட்டூர்,
தஞ்சாவூர் மாவட்டம். .... மனுதாரர்

செயல் அலுவலர்,
மெலட்டூர் முதல்நிலை பேரூராட்சி ,
தஞ்சாவூர் மாவட்டம். .... எதிர்மனுதாரர்

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், மெலட்டூர் அஞ்சல், கோணியக்குறிச்சி என்ற முகவரியைச் சேர்ந்த திரு. த. பழனிராஜ் என்பவரது 11.09.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.09.2023 அன்று பெறப்பட்டு, 275/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், மெலட்டூர் அஞ்சல், கோணியக்குறிச்சி என்ற முகவரியைச் சேர்ந்த திரு. த. பழனிராஜ் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"மெலட்டூர் முதல்நிலை பேரூராட்சியில் கடந்த 2022 ஆண்டு நகர்ப்புற உள்ளாட்சி மன்ற தேர்தல் வெற்றிகரமாக நடந்து முடிந்தது. வெற்றி பெற்ற வார்டு உறுப்பினர்கள், வார்டு உறுப்பினர் பதவி ஏற்கும்போது அவர்கள் ஏற்றுக்கொண்ட உறுதிமொழி, நானோ அல்லது எனது கணவர் / மனைவியோ அல்லது எனது இரத்தம் சம்பந்தமான உறவுகளோ, வார்டு உறுப்பினர்களுக்குரிய சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு நடப்பேன் என்றும், மெலட்டூர் முதல்நிலை பேரூராட்சியில் இலாபம் தரக்கூடிய எந்த ஒரு ஒப்பந்தத்திலும் (அ) ஏலத்திலும் எனது அதிகார வரம்பை மீறி செயல்பட மாட்டேன் என்று உறுதி அளித்து பதவி ஏற்றுக் கொள்கிறார்கள்.

ஆனால் மெலட்டூர் முதல்நிலை பேரூராட்சியில் மட்டும் தனது வார்டு உறுப்பினரின் அதிகாரத்தை பயன்படுத்தி 2022–2023 மற்றும் 2023–2024 ஆம் ஆண்டு தொடர்ந்து இரண்டு ஆண்டுகளிலும் வார்டு உறுப்பினர்கள் சட்ட விதிமுறைகளை மீறி, செயல் அலுவலரின் ஒப்புதலோடு வார்டு உறுப்பினர் பெயரிலும் அல்லது வார்டு உறுப்பினர் அவர்களின் கணவர் பெயரிலும் மெலட்டூர் பேரூராட்சியின் பொது ஏலத்தில் சட்ட விதிமுறைகளை மீறி ஏலத்தில் கலந்து கொண்டு வார்டு உறுப்பினரின் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி ஏலம் எடுத்துள்ளனர்.

இவ்வாறாக, மெலட்டூர் முதல்நிலை பேரூராட்சி மன்ற வார்டு எண். 8 உறுப்பினர் திருமதி.ரா.சுபஸ்ரீ என்பவர் தனது கணவர் திரு.ராஜீவ் காந்தி என்பவரின் பெயரில் மெலட்டூர் பேரூராட்சியில் 2022–2023 மற்றும் 2023–2024 ஆம் ஆண்டுகளில் பேரூராட்சிக்கு சொந்தமான சாலியமங்கலம் – பாபநாசம் சாலையில் 9/0 – 9/16 கி.மீ வரை உள்ள புளியமர மகசூலை விதி மீறி ஏலம் எடுத்துள்ளார் என புகாராக தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக தஞ்சாவூர் மண்டல உதவி இயக்குநர் பேரூராட்சி அலுவலகத்திற்கு 19.06.2023 அன்று பதிவுத்தபால் அனுப்பியும், இன்னாள்வரை எவ்விதமான விசாரணையும் மேற்கொள்ளாமல் உள்ளார்கள்.

ஆகவே அய்யா அவர்கள் மெலட்டூர் முதல்நிலை பேரூராட்சியில் விசாரணை மேற்கொண்டு வார்டு உறுப்பினரின் அதிகாரத்தை தவறாக பயன்படுத்திய 8வது வார்டு உறுப்பினர் திருமதி ரா. சுபஸ்ரீ என்பவரை பேரூராட்சி மன்ற உறுப்பினர் பதவியிலிருந்து தகுதி நீக்கம் செய்ய, தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தங்களை மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 20.09.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மெலட்டூர் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

மெலட்டூர் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 09.10.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"மெலட்டூர் பேரூராட்சி மன்ற 8வது வார்டு உறுப்பினர் அவர்களின் கணவர் சாலியமங்கலம்–பாபநாசம் சாலையில் கி.மீ. 9/10 – 9/16 வரை உள்ள புளிய மர மகசூல் ஏலத்தினை 2022–2023 மற்றும் 2023–2024ஆம் ஆண்டுகளுக்கு எடுத்துள்ளார். இதற்கான பதிவேடுகள் மெலட்டூர் பேரூராட்சி அலுவலகத்தில் உள்ளது. இந்த ஏலம், மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

| ஆண்டு | பல்வகை இரசீது எண் | தொகை (ரூ) |
|---|---|---|
| 2022–2023 | 952/24.03.2022 | 1600.00 |
| 2023–2024 | 421/23.03.2023 | 1760.00 |

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 50ல் மன்ற உறுப்பினர்களின் தகுதியின்மை குறித்த பிரிவில், மன்ற உறுப்பினர்களோ அல்லது அவருடைய இரத்த சம்பந்தமான உறவினர்களோ தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளில் ஏலம் அல்லது குத்தகை எடுப்பதில் கலந்துக்கொள்ள கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998–லும் பிரிவு 32 (1) (e) இல் மன்ற உறுப்பினர்களின் தகுதியின்மை குறித்த பிரிவில், மன்ற உறுப்பினர்களோ அல்லது அவருடைய இரத்த சம்பந்தமான உறவினர்களோ தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளில் ஏலம் அல்லது குத்தகை எடுப்பதில் கலந்துக்கொள்ள கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது எனினும் ஏலம் நேரத்தில் தொடர்புடைய நபர்கள் பொது ஏலத்தில் கலந்து கொண்டனர். பொது ஏலத்தில் கலந்து கொண்ட நபர்களில் அதிக ஏலம் கேட்ட நபருக்கு ஏலம் வழங்கப்பட்டது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

3) மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான மெலட்டூர் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரும் 10.10.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.10.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) 10.10.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் திரு D. பழனிராஜ் என்பவர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-

"மெலட்டூர் முதல்நிலை பேரூராட்சி மன்ற 8–வது வார்டு உறுப்பினர் திருமதி. ரா.சுபஸ்ரீ என்பவர் தனது கணவர் திரு.ராஜீவ்காந்தி என்பவர் பெயரில் மெலட்டூர் பேரூராட்சியில் 2022–23 மற்றும் 2023–24 ஆம் ஆண்டுகளில் பேரூராட்சிக்கு சொந்தமான புளியமர மகசூலை விதிமீறி ஏலம் எடுத்துள்ளார். இது சம்மந்தமாக உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டல பேரூராட்சி அலுவலகத்திற்கு 19.06.2023 அன்று பதிவுத்தபால் மூலம் தெரிவித்தும் இதுநாள் வரை எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை தெரிவித்து எனவே விதிமீறி ஏலம் எடுத்துள்ள 8–வது வார்டு உறுப்பினர் திருமதி. சுபஸ்ரீ என்பவரை தகுதி நீக்கம் செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 11.09.2023 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள விவரங்களையும் எனது மேல்வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படியும் இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) எதிர்மனுதாரரான மெலட்டூர் முதல்நிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் திரு. ரெ.குமரேசன் என்பவர் 10.10.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-

"தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 50–ன்படியும் மற்றும் தற்போதைய 1998ம் ஆண்டைய தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டப்பிரிவு 32 (1) (e), (தமிழ்நாடு சட்டம் 9/1999)ன்படியும் மன்ற உறுப்பினர்களின் தகுதியின்மை குறித்த பிரிவில், மன்ற உறுப்பினர்களோ அல்லது அவருடைய இரத்த சம்மந்தமான உறவினர்களோ, தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளில் ஏலம் அல்லது குத்தகை எடுப்பதில் கலந்துகொள்ளக்கூடாது என வாய்மொழியாக வார்டு உறுப்பினருக்கு தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் 8–வது வார்டு உறுப்பினர் திருமதி ரா.சுபஸ்ரீ தனது கணவர் திரு.ராஜீவ்காந்தி என்பவர் பெயரில் சாலியமங்கலம்–பாபநாசம் சாலையில் கி.மீ.9/0 – 9/16 புளியமரங்களை 2022–2023 மற்றும் 2023–2024 ஆம் ஆண்டுகளுக்கு ஏலம் எடுத்துள்ளார். இந்த ஏலம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்பதை இம்முறைமன்றத்தின் முன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் எனது 09.10.2023 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

6) மேலும் மெலட்டூர் முதல்நிலை பேரூராட்சி மன்ற உறுப்பினர் திருமதி.ரா.சுபஸ்ரீ என்பவரும் 26.10.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 12.10.2023 தேதியிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

7) மெலட்டூர் முதல்நிலை பேரூராட்சி மன்ற உறுப்பினர் திருமதி.ரா.சுபஸ்ரீ என்பவர் 26.10.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:—

"நான் தஞ்சாவூர் மாவட்டம், மெலட்டூர் பேரூராட்சி மன்ற 8வது வார்டு உறுப்பினராகப் பொறுப்பில் உள்ளேன். மெலட்டூர் பேரூராட்சியில் 2022—2023 மற்றும் 2023—24ம் ஆண்டுகளில் பேரூராட்சிக்கு சொந்தமான புளியமர ஏலம் குறித்து மன்றத்தில் பொருள் (Subject) ஏதும் வரவில்லை என்பதையும், மேற்கண்ட புளியமர ஏலத்தில் எனது கணவர் கலந்துகொள்ளவில்லை; மற்றும் பணம் ஏதும் எனது கணவரால் கட்டப்படவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.''

8) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், மெலட்டூர் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை, அவரது வாக்குமூலம் மற்றும் மெலட்டூர் முதல்நிலை பேரூராட்சி மன்ற உறுப்பினர் திருமதி. ரா.சுபஸ்ரீ என்பவரின் வாக்குமூலம் ஆகியவற்றை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

தஞ்சாவூர் மாவட்டம், மெலட்டூர் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு.த.பழனிராஜ் என்பவர் தனது 11.09.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் மெலட்டூர் முதல்நிலை பேரூராட்சி மன்ற வார்டு எண்.8 உறுப்பினர் திருமதி.ரா.சுபஸ்ரீ என்பவர் தனது கணவர் திரு.ராஜீவ் காந்தி என்பவரின் பெயரில் மெலட்டூர் பேரூராட்சியில் 2022—23 மற்றும் 2023—24 ஆம் ஆண்டுகளில் பேரூராட்சிக்கு சொந்தமான சாலியமங்கலம் — பாபநாசம் சாலையில் 9/0 — 9/16 கி.மீ வரையில் உள்ள புளியமர மகசூலை ஏலம் எடுத்துள்ளதன் மூலம் தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி உள்ளார் என புகாராக தெரிவித்து, திருமதி.ரா.சுபஸ்ரீ என்பவரை பேரூராட்சி மன்ற உறுப்பினர் பதவியிலிருந்து தகுதி நீக்கம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார்.

மேற்காணும் புகார் மனு குறித்து, மெலட்டூர் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ள அறிக்கை, வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் மூலம் கீழ்காணும் விவரங்கள் தெரிய வருகிறது.

1) பேரூராட்சி செயல் அலுவலர் 2022—23, 2023—24 ஆம் நிதி ஆண்டுக்கான குத்தகை சம்பந்தமான ஏல அறிவிப்போ, ஏல அறிவிக்கையோ (Gazette Notification) ஏதும் சமர்ப்பிக்கவில்லை.

2) 2022—23, 2023—24 ஆம் நிதி ஆண்டுக்கான குத்தகை இனங்களுக்கான நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான நகல் கோரியதற்கு விளம்பரம் செய்யப்பட்டது சம்பந்தமாக நாளிதழ் நகல் மற்றும் கடித நகலை ஆய்வு செய்யும் போது அன்னார் தெரிந்தே சம்பந்தமே இல்லாத வேறொரு நாளிதழ் விளம்பரத்தை சமர்ப்பித்துள்ளார்.

3) மெலட்டூர் பேரூராட்சியில் மன்ற உறுப்பினர் திருமதி.ரா.சுபஸ்ரீ என்பவரின் கணவர் திரு.ராஜுவ் காந்தி என்பவருக்கு 2022–23, 2023–24 ஆம் ஆண்டுகளில் மரமகசூல் ஏலம் விடப்பட்டுள்ளது என பேரூராட்சியில் பேணப்படும் ஏல பதிவேட்டில் பதிவு செய்து திரு.ராஜுவ் காந்தி என்பவரின் கையொப்பம் பெறப்பட்டுள்ளதாகவும் ஒவ்வொரு நிதி ஆண்டும் ஏலம் விடப்பட்டுள்ளது என தெரிவித்து ஏலபதிவேட்டினை சமர்ப்பித்துள்ளதில்— அரசாணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19.09.2008–ன்படி செயல்படாமல் சட்டத்திற்கு புறம்பாக விதிகளை மீறி செயல்பட்டுள்ளார். மேலும் அரசின் சுற்றறிக்கை மற்றும் வழிமுறையீடு பின்பற்றி இருந்தால் இதுபோன்ற நிகழ்வுகள் ஆரம்ப கட்டத்திலேயே தவிர்த்திருக்கலாம் என இம்முறைமன்றம் கருதுகிறது. சுமார் 15 ஆண்டுகள் ஆகியும் அரசாணை சட்டம் பற்றி எந்த அடிப்படை விழிப்புணர்வு இல்லாமல் செயல்பட்டுள்ளார்.

4) மெலட்டூர் பேரூராட்சியில் 2022–23 மற்றும் 2023–24 ஆம் ஆண்டுகளில் பேரூராட்சி மன்ற உறுப்பினர் திருமதி.ரா.சுபஸ்ரீ என்பவரின் கணவர் திரு.ராஜுவ் காந்தி என்பவர் அதிக ஏலத் தொகை கோரியதன் அடிப்படையில் 2022–23 ஆம் ஆண்டிற்கான ஏலத்தொகை ரூ.1,600/– ஐ இரசீது எண்.952/2021–22 நாள் 24.03.2022 மூலம் செலுத்தப்பட்டுள்ளதாக செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

ஆனால் மேற்காணும் இரசீதில் ஏலத்தொகை செலுத்துபவரின் கையொப்பம் பெறப்படவில்லை என ஆவணங்கள் மூலம் தெரிய வருகிறது.

ஏலத் தொகையான ரூ.1,600/– செலுத்தப்பட்டதால் புகாருக்குள்ளான பேரூராட்சி மன்ற உறுப்பினரின் கணவர் திரு. ராஜுவ் காந்தி என்பவருக்கு ஏலத்தினை அங்கீகரிக்கும் வகையில் பேரூராட்சி தீர்மான எண்.09 நாள் 31.03.2022–ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என பேரூராட்சி செயல் அலுவலர் தனது நடவடிக்கைகள் ந.க.எண்.22/2022–அ1 நாள் 05.04.2022 மூலம் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

ஆனால் பேரூராட்சி மன்ற உறுப்பினரின் கணவரான திரு.ராஜுவ் காந்தி என்பவருக்கு ஏலத்தினை அங்கீகரித்து நிறைவேற்றப்பட்டதாக தெரிவிக்கும் தீர்மான நகலை பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை. மேலும் 2022–23, 2023–24 ஆம் நிதி ஆண்டுக்கான மன்றப்பொருளோ, தீர்மான நகலோ இணைக்கப்படவில்லை.

5) பேரூராட்சி செயல் அலுவலரின் நடவடிக்கைகள் ந.க.எண்.22/2022–அ1 நாள் 05.04.2022–ல் ஏலத்தினை திரு. ராஜுவ் காந்தி என்பவருக்கு உறுதி செய்து ஆணையிடப்பட்டுள்ளது என செயல் அலுவலர் நடவடிக்கைகளின் நகலை சமர்ப்பித்துள்ளார். ஆனால் சார்பு செய்யப்பட்டதற்கான ஆவணம் ஏதும் செயல் அலுவலரால் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் இந்நேர்வில் மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் தான் பணம் செலுத்த அறிவிப்பு வழங்கப்படவேண்டும். பணம் செலுத்திய பின்னர் மன்ற பொருள் வைத்து தீர்மானம் நிறைவேறப்பட்டுள்ளதை ஆவணங்கள் மூலம் தெரிய வருகிறது. மேலும், குத்தகைதாரருடன் 'குத்தகை ஒப்பந்தம்' மேற்கொண்டதற்கான விவரம் ஏதும் தெரிவிக்கப்படவில்லை. எனவே, பேரூராட்சி செயல் அலுவலர் தெரிந்தே விதிகளை மீறி செயல்பட்டுள்ளார் என கருதப்பட வேண்டியுள்ளது.

'தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 50–ன்படியும் மற்றும் தற்போதைய 1998ம் ஆண்டைய தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டப்பிரிவு 32 (1) (e), (தமிழ்நாடு சட்டம் 9/1999)ன்படியும் மன்ற உறுப்பினர்களின் தகுதியின்மை குறித்த பிரிவில், மன்ற உறுப்பினர்களோ அல்லது அவருடைய இரத்த சம்பந்தமான உறவினர்களோ, தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளில் ஏலம் அல்லது குத்தகை எடுப்பதில் கலந்துகொள்ளக்கூடாது என வாய்மொழியாக வார்டு உறுப்பினருக்கு தெரிவிக்கப்பட்டது என மெலட்டூர் முதல்நிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில் அன்னார் இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் (அல்லது) உதவி இயக்குநர் தஞ்சாவூர், தெளிவுரை கோரி எவ்வித கடிதமும் அனுப்பாமல் ஆணை வழங்கி தன்னிச்சையாக செயல்பட்டுள்ளார்.

மனுதாரர் அளித்துள்ள புகார் மனு தொடர்பாக பேரூராட்சி மன்ற உறுப்பினர் திருமதி.ரா.சுபஸ்ரீ என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ள வாக்குமூலத்தில் கீழ்க்காணும் விபரங்கள் தெரிவித்துள்ளார்.

a) 2022–23 மற்றும் 2023–24 ஆம் ஆண்டுகளில் மெலட்டூர் பேரூராட்சிக்கு சொந்தமான புளியமரம் ஏலம் விடுவது குறித்து பேரூராட்சி மன்றத்தில் பொருள் ஏதும் வரப்படவில்லை.

b) மேலே தெரிவிக்கும் புளியமர ஏலத்தில் எனது கணவர் திரு.ராஜுவ் காந்தி என்பவர் கலந்து கொள்ளவில்லை.

c) ஏலப்பணம் ஏதும் எனது கணவரால் செலுத்தப்படவில்லை.

2022 – 2023 மற்றும் 2023–24 ஆம் ஆண்டுகளில் மரமகசூல் ஏலத்தில் பேரூராட்சி மன்ற உறுப்பினர் திருமதி. ரா. சுபஸ்ரீ என்பவரின் கணவர் திரு. ராஜுவ் காந்தி என்பவர் கலந்து கொண்டார் என மெலட்டூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையிலும், வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளார். ஆனால் புகாருக்குள்ளான பேரூராட்சி மன்ற உறுப்பினர் திருமதி. ரா. சுபஸ்ரீ என்பவர் தனது வாக்குமூலத்தில் தனது கணவர் திரு. ராஜுவ் காந்தி மேற்படி ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை என்று தெரிவித்துள்ளார். இவ்வாறு பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர் ஒருவருக்கொருவர் முரண்பாடான தகவல்களை வாக்குமூலத்தில் தெரிவிப்பதால், பேரூராட்சிகளின் இயக்குநர், உயர்மட்ட அலுவலர்கள் கொண்ட ஒரு குழுவினை அமைத்து, அக்குழுவின் மூலம் இப்புகார் தொடர்பான மெலட்டூர் பேரூராட்சியால் கையாளப்படும் அனைத்து ஆவணங்களையும் ஆய்வு செய்து புகாரின் உண்மைத் தன்மை இருப்பின் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள பிரிவு 32 (1) (e)–ன் கீழ் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் அறிக்கையினை 30 நாட்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். இதில் எவ்வித கால கணக்கமும் இருக்கக்கூடாது என இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, டிசம்பர் 19–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. த. பழனிராஜ்,
மெலட்டூர் அஞ்சல்,
பாபநாசம் வட்டம்,
கோணியக்குறிச்சி,
தஞ்சாவூர் மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
மெலட்டூர் முதல்நிலை பேரூராட்சி ,
தஞ்சாவூர் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 028.

5) திருமதிரா.சுபஸ்ரீ
பேரூராட்சி மன்ற உறுப்பினர்,
மெலட்டூர் முதல்நிலை பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம்.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்